# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்
## 273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018

டாக்டர்.மு.ராஜேந்திரன், இ. ஆ. ப.,
ஆணையர்

ந.க. எண். : 8558/ 2018/கூ.தே.1 நாள்: 14.06.2019

**தேர்தல் திட்டம் (EP(R) No. 07/2019)**
**(Communication of Election Programme)**
(1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், விதி எண். 52(5) –ன் கீழ்)

***

1983–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டம், பிரிவு 33-A-ன் கீழ் அமைக்கப்பட்டு, 1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், விதி எண். 52 மற்றும் 53 ல் விவரித்தபடி தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்துவதற்கு, சட்டப்பிரிவு 33(11) மற்றும் விதி எண். 52–A-ன் படி, தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், (இனி ஆணையம் எனப்படும்), விதி எண். 52 (5)– ன் கீழ் இணைப்பு 1–ல் கண்டுள்ள சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள், தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தலுக்கு இணைப்பு 2–ல் கண்டுள்ளப்படியான தேர்தல் திட்டத்தை இதன்மூலம் அறிவிக்கிறது.

2. **மாநில தேர்தல் அலுவலர் (State Election Officer) :**
   1) இத்தேர்தல் திட்டத்தை தொடர்புடைய சங்கம் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு தெரிவித்துவிடவும்,
   2) விதி 52–A(3)–ல் சொல்லப்பட்டபடி ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வெளியிடல், தேர்தல்களை நடத்த ஒத்துழைத்தல் மற்றும் மேற்பார்வை செய்திடல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

3. **மாவட்ட தேர்தல் அலுவலர் (District Election Officer) :**
   1) விதி எண். 52(6)(a) ன் படி வேட்புமனு தாக்கல், பரிசீலனை, வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணுகை போன்ற இனங்களுக்கான இடத்தை தேர்தல் அறிவிப்பில் (Election Notice ) குறிப்பிட்டு தேர்தல் அறிவிப்பை வழங்கிடவும்,
   2) நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல்களுக்கு விதி எண். 52 (1 )(c)–ன் படி வாக்காளர் பட்டியல் அலுவலர் (Electoral Officer), விதி எண். 52 (3 )(a)–ன் படி தேர்தல் அலுவலர் (Election Officer) ஆகியோரை நியமித்திடவும், தலைவர் / துணைத்தலைவர் (Office Bearers) தேர்தலுக்கு விதி எண். 53(1 )(a) தேர்தல் அலுவர் நியமித்திடவும்,

3) விதி எண். 52–A(4)–ல் சொல்லப்பட்டபடி ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வெளியிடல், தேர்தல்கள் நடத்த ஒத்துழைத்தல் மற்றும் மேற்பார்வை செய்திடல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகின்றனர்.
4) போதிய காவல் துறை பாதுகாப்பு மேற்கொள்ளவும் வேட்பாளர்கள் விருப்பப்படின் அவரவர்தம் சொந்த செலவில் ஒளிப்பதிவு (Video Coverage) மேற்கொள்ள அனுமதி வழங்கிடவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

4. <u>இத்தேர்தல் திட்டம் தொடர்புடைய சங்கம் :</u>

இச்சங்கம் தனக்கு ஏற்பட்ட சட்டப்பூர்வ கடமைகளை விதி எண். 52 (19)–ல் சொல்லப்பட்டபடியும், இதர வகையிலும், குறிப்பாக விதி எண். 52 (6)(d), (6)(e), (7)(a), (7)(c) மற்றும் (10)(a)-ன் படியும் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்./–
ஆணையர்

ஆணையருக்காக

இணைப்பு: மேற்கண்டவாறு

பெறுநர் :

1. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் / மாநில தேர்தல் அலுவலர்
2. தொடர்புடைய மாவட்ட தேர்தல் அலுவலர்கள்
3. இணைப்பில் உள்ள சங்கங்கள் – மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மூலமாக

} தகவலுக்காகவும், உரிய நடவடிக்கைக்காகவும் ( மின்னஞ்சல் மூலம்)

நகல் :

1. தலைமைச் செயலர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை – 9
2. அரசு முதன்மை செயலர்,
   கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை,
   புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை – 9
3. அரசு முதன்மை செயலர்,
   கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை – 9
4. காவல்துறை இயக்குநர், மயிலாப்பூர், சென்னை – 4
5. தொடர்புடைய மாவட்ட ஆட்சித்தலைவர்
6. தொடர்புடைய மாவட்ட காவல் கண்காணிப்பாளர்
7. தொடர்புடைய தேர்தல் பார்வையாளர்

} தகவலுக்காக ( மின்னஞ்சல் மூலம்)

14.06.19

## இணைப்பு – I

## தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

ந.க. எண். 8558/ 2018/கூ.தே.1 தேர்தல் திட்டம் (R) – 07/2019

மாநில தேர்தல் அலுவலர்– தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியம்

| வ.எண் | மாவட்டம் | சங்கத்தின் பெயர் மற்றும் முகவரி | தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிர்வாகக்குழு இடங்கள் | | | | அலுவல் நிர்வாகிகள் | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆதி திராவிடர் / பழங்குடியினர் | மகளிர் | பொது | மொத்தம் | தலைவர் | துணை தலைவர் | மொத்தம் | |
| 1 | 2 | 3 | 4 | | | | 5 | | | 6 |
| 1 | திண்டுக்கல் | கொட்டப்பட்டி தோல் பதனிடுவோர் கூட்டுறவு சங்கம்<br>முஏஐ.468<br>சவேரியார் பாளையம், திண்டுக்கல் | 1 | 2 | 4 | 7 | 1 | 1 | 2 | 9 |
| | | மொத்தம் | 1 | 2 | 4 | 7 | 1 | 1 | 2 | 9 |

ஒம்./–

ஆணையர்

ஆணையருக்காக

14.06.19

இணைப்பு –2 (ந.க. எண். : 8558/ 2018/கூ.தே.1)

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

தேர்தல் திட்டம் – (EP No. 07 /2019)

(தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள், 1988, விதி எண். 52 (5 )- ன் கீழ்

| வ. எண் | விவரங்கள் | நாள் |
|---|---|---|
| 1. | மாவட்ட தேர்தல் அலுவலரால் தேர்தல் அறிவிப்பு வெளியிடும் நாள் | 20.06.2019 |
| 2. | சங்கம் உறுப்பினர் பட்டியலை சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | 22.06.2019 |
| 3 | வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு சங்க உறுப்பினர் பட்டியல் அளிக்க வேண்டிய நாள் | 22.06.2019 |
| 4 | வாக்காளர் பட்டியல் அலுவலர் சங்க அறிவிப்பு பலகையில் வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் | 24.06.2019 |
| 5 | வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு சங்கம் உறுப்பினர் பட்டியல் அளிக்காத நேர்வில் வாக்காளர் பட்டியல் அலுவலர் வாக்காளர் பட்டியலைத் தயாரித்து சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | 24.06.2019 |
| 6 | வாக்காளர் பட்டியலுக்கு உறுப்பினர் கோருரிமை அல்லது மறுப்பு தெரிவிக்கும் நாள் | 26.06.2019<br>நேரம் : 10 மு.ப முதல் 5 பி.ப |
| 7 | வாக்காளர் பட்டியலுக்கு கோருரிமை அல்லது மறுப்பு தெரிவித்தது குறித்த வாக்காளர் பட்டியல் அலுவலரின் முடிவுகள் சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | 28.06.2019<br>நேரம் : 10 மு.ப முதல் 4 பி.ப |
| 8 | வாக்காளர் பட்டியல் அலுவலர் சங்க அறிவிப்பு பலகையில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் | 28.06.2019<br>நேரம் : 5 பி.ப |
| 9 | வேட்பு மனு தாக்கல் செய்யப்பட வேண்டிய நாள் | 01.07.2019<br>நேரம் : 10 மு.ப முதல் 5 பி.ப |
| 10 | வேட்பு மனு பரிசீலனை | 02.07.2019<br>நேரம் : 11 மு.ப முதல் 4 பி.ப |
| 11 | செல்லத்தக்க வேட்பு மனுக்கள் பட்டியல் வெளியிடுதல் | 02.07.2019<br>நேரம் : 5 பி.ப |
| 12. | வேட்பு மனு திரும்பப் பெறுதல் | 03.07.2019<br>நேரம் : 10 மு.ப முதல் 4 பி.ப |
| 13 | போட்டியிடும் வேட்பாளர் இறுதி பட்டியல் வெளியிடும் நாள் | 03.07.2019<br>நேரம் : 5 பி.ப |
| 14 | தேவைப்படும் நேர்வில் வாக்குப்பதிவு நடைபெறும் நாள் | 08.07.2019<br>நேரம் : 8 மு.ப முதல் 5 பி.ப |
| 15. | ஒட்டு எண்ணுகை மற்றும் தேர்தல் அலுவலரால் தேர்தல் முடிவு அறிவித்தல் | 09.07.2019<br>நேரம் : 10 மு.ப முதல் |
| 16. | தலைவர் / துணைத் தலைவர் தேர்தலுக்கான கூட்ட அறிவிப்பு நாள் (நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன்) | 09.07.2019 |
| 17 | தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல் நாள் | 13.07.2019<br>நேரம் : 10 மு.ப முதல் |

ஒம்./–
ஆணையர்

ஆணையருக்காக

14.06.19